பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 07 புதன்கிழமை 23.07.2025 கதிர் 256

**இனி இது ரகசியம் அல்ல!**

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்பூதாகாரமாகவளர்ந்துவரும் நிலையில், அதனை மழுங்கடிக்கவும் நீர்த்துப்போகச் செய்யவுமான நடவடிக்கைகள் திரைமறைவில் ☞2

## தனியார்துறையில் குறைந்தபட்ச வேதன சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்

வேலையாட்களின் குறைந்தபட்ச வேதனம் தொடர்பான (திருத்தச்) சட்டமூலம் 182 வாக்குகளால் நிறைவேறியது.

நாடாளுமன்ற உறுப்பினர்மன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வேலையாட்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் குறைந்தபட்ச வேதனம் தொடர்பான (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை தொடர்ந்து அதற்கான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதன்போது சபையில் இருந்த சகலரும் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன்படி எவரும்அதனைஎதிர்த்துவாக்களிக்கவில்லை. எனினும்42பேர்சமூகமளித்திருக்கவில்லை.

இதற்கமைய 182 வாக்குகளால் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதாக ☞3

## வெலிக்கடை படுகொலைகள் குறித்தும் விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும்

### நாடாளுமன்றில் செல்வம் எம்.பி. வலியுறுத்து

1983 ஆம் ஆண்டு இதே மாதம் வெலிக்கடைசிறையில் வைத்து படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பிலும் அரசு விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் அவர்கள் புதைக்கப்பட்ட புதைக்குழி எங்கேயுள்ளதெனவும் அரசு கண்டுபிடிக்க வேண்டும் என ஜனநாயகத்தமிழ் தேசிய கூட்டணியின் உறுப்பினர் செலவம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வேலையாட்களின் வரவு செலவுத்திட்ட நிவாரணப்படி திருத்த சட்டமூலம் மற்றும் வேலையாட்களின்தேசியகுறைந்தபட்ச ☞2

## பெருந் தோட்டத் தொழிலாளர்களை கைவிட்டுவிட்டது ஆளும்தரப்பு

### மனோ கணேசன் குற்றச்சாட்டு

வரவு செலவு திட்டத்தில் ஜனாதிபதி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குறுதியளித்த1700ரூபாசம்பளஅதிகரிப்பு இதுவரை வழங்கப்படவில்லை. அதனால் தோட்டத் தொழிலாளர்களை ஆளும்தரப்பு கைவிட்டுள்ளது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்மன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வேலையாட்களின் வரவு செலவுத்திட்ட நிவாரணப்படி திருத்த சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதன திருத்த சட்டமூலம் ஆகியவற்றின் மீதானவிவாதத்தில்உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பிரதான தொழிலாளர்களான தோட்டத் தொழிலாளர்களை ஆளும்தரப்பு கைவிட்டுள்ளது. அவர்களுக்காககவலைப்பட்டு கதைக்கின்றார்களே தவிர அவர்களின் தேவைகள் எதுவும் நிறைவேற்றுவதில்லை. வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்து ஜனாதிபதி உரையாற்றுகையில் தோட்ட ☞3

## மேலும் 8 மனித எலும்பு எச்சங்கள் நேற்றும் அகழ்வில் வெளிப்பட்டன

### அவற்றில் சிசுக்கள், சிறார்களினுடையவை





செம்மணி மனிதப் புதைகுழி பகுதியில் உள்ள அரியாலை சிந்துப்பாத்தி மயானக் குழிகளில் இருந்து நேற்று மேலும் 8 மனி எலும்பு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் சிசுக்கள் மற்றும் சிறுவர்களின் பல எலும்பு எச்சங்களும் அடங்கியுள்ளன். அது தவிர குழந்தைகள் பால் அருந்தப் ☞2

## முன்னாள் ஜனாதிபதிகளில் எவருக்கும் இனிமேல் சிறப்புரிமைகள் கிடைக்காது

நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகள் மற்றும் சலுகைகளை இரத்து செய்வதற்கான புதிய சட்ட மூலத்தை தயாரிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அனைத்து ஜனாதிபதிகளுக்கும்பொதுவாகவேஇந்ததீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எவருக்கும் சிறப்புரிமை வழங்கப்படவில்லைஎனஅமைச்சரவைபேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ள அனைத்து சிறப்புரிமைகளும் இதன் மூலம் இரத்து செய்யப்படும். இந்த சட்ட மூலம் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர்மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். நாடாளுமன்ற உறுப்பினர்மன்றத்தில் அனுமதி கிடைத்த பின்னரே சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய கால அவகாசம் தொடர்பில் குறிப்பிட முடியும். மிகக்குறுகிய காலத்துக்குள் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்கு எந்தவொரு நபருக்கும் சிறப்புரிமைவழங்கப்படமாட்டாது. ☞2

## மஹர சிறைப் பள்ளிவாசலை மீளத்திறக்க அனுமதி இல்லை

### நீதி அமைச்சர் திட்டவட்ட அறிவிப்பு

மஹர சிறைச்சாலை வளவினுள் காணப்படும் பள்ளிவாசலுக்கு வெளியார் வருவதினால் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. எனவேஅந்தபள்ளிவாசலை மீண்டும் திறக்க அனுமதிக்கப்படாது. அதற்குப் பதிலாக அந்த பிரதேசத்தில் மற்றொரு பள்ளிவாசல் அமைக்க 5 பேச் காணி வழங்க நடவடிக்கை ☞3

## ஒரு கையால் கொடுப்பதாகக் காட்டி மறுகையால் பறிக்கிறது ஆளும்தரப்பு

### நாமல் ராஜபக்ச எம்.பி. சாடல்

ஆளும்தரப்புசம்பளத்தைஅதிகரித்துவிட்டு அந்த சம்பளத்தில் பெருந் தொகையை மீண்டும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வரிக்கொள்கையையே ஆளும்தரப்பு செயற்படுத்துகின்றது என லங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்மன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட ☞2

### கொலையாளிகளை பாதுகாத்தோர் ராஜபக்சவினரே

## வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டாதீர்கள் என நாமலுக்குப் பிரதி அமைச்சர் கடும் எச்சரிக்கை

ராஜபக்சவினரே வெள்ளைவான் கடத்தல்காரர்களையும் படுகொலை யாளிகளையும்பாதுகாத்துவந்தார்கள். எனவே எம்மிடம்வாய்கொடுத்துவாங்கிக்கட்டிக்கொள்ள வேண்டாம் என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்ஹ நாமல் ராஜபக்சவை எச்சரித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வேலையாட்களின் வரவு செலவுத்திட்ட நிவாரணப்படி திருத்த சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் தேசிய குறைந்த பட்ச வேதன திருத்த சட்டமூலம் ஆகியவற்றின் மீதான விவாதத்தில் தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்ஹ உரையாற்றிக் ☞2

## பெருந்தோட்ட தொழிலாளர் சம்பளத்தை 1700 ஆக அதிகரிக்க நடவடிக்கை தேவை

### ஆளும்தரப்பிடம் எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

குறைந்தபட்சவேதனம்அதிகரிக்கப்படுவது போலவே ஆளும்தரப்பு பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் 1700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞2

## தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்க மூவர் விசாரணைக் குழு பரிந்துரை

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாகவிசாரணைநடத்தியநாடாளுமன்ற உறுப்பினர்மன்ற விசாரணைக் குழு, அவரை அனைத்து குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளியாகக் கண்டறிந்து, அவரை பதவியில் இருந்து நீக்குவதற்கு பரிந்துரை செய்துள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன அறிவித்தார்.

பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பொலிஸ்மாஅதிபர்தேசபந்துதென்னகோனை நிரந்தரமாகப் பதவி நீக்குவது தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில்அதனைநேற்றுசெவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடியபோது, சபாநாயக அறிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

பொலிஸ்மா அதிபர் தேசபந்து ☞2

## இனி இது .....

மேற்கொள்ளப்படுவதான சந்தேகம் தமிழர்கள் மத்தியில் பெருமளவில் உள்ளதை யாரும் மறுக்க முடியாது.

இந்த நிலையில், கிழக்கிலும் ஒரு மனிதப் புதைகுழியைத் தோண்டுவதற்கான முன்னேற்பாடுகள் மும்முரம்பெற்றுள்ளன. களுவாஞ்சிக்குடியிலும் ஒரு -மனிதப் புதைகுழியைத் தோண்டுவதற்கான மதிப்பீட்டுப் பணிகளைத் தொடங்குமாறு அங்குள்ள நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இது தொடர்பில் நாடாளுமன்றத்திலும் உரையாற்றியிருந்தார். ஹச் யாத்திரை சென்-றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தவர்கள் கடத்தப்பட்டுக் கொன்று புதைக்கப்பட்டனர் என்றும் அது தொடர்பான விசாரணைகள் ஏன் முறைப்படி இடம்பெறவில்லை என்றும், அந்த மனிதப் புதைகுழியை தோண்டுவதற்கு ஆளும்தரப்பு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

1990.07.12 புனித ஹஜ் கடமையினை நிறைவு செய்து வீடு திரும்பிய யாத்திரிகர்கள் மற்றும் வியாபாரிகள் கல்முனை-, மட்டக்களப்பு இடையிலான பிரதான வீதியில் குருக்கள்மடம் எனும் இடத்தில் கடத்தப்பட்டனர். பின்னர் அவர்கள் காணாமலாக்கப்பட்டனர். இதனைச் செய்தவர்கள் அப்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாணப் போராளிகளாக இருந்தவர்கள்தான் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. நீண்ட காலமாகத் தொடரும் இந்த வழக்கு களுவாஞ்சிக்குடி நீதிவான் மன்றத்தில் ஜூலை 21 மீண்டும் அழைக்கப்பட்டிருந்தது.

இந்தத் தவணையில், சட்டமா அதிபர் மற்றும் காணாமல்போன ஆட்கள் பற்றி விசாரணை நடத்தும் அலுவலகப் பிரதிநிதிகள் ஆகியோருடன் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியையும் நீதிமன்றிற்கு வருமாறு கடந்த தவணையிலேயே நீதிவான் கட்டளை பிறப்பித்திருந்தார். அதற்கமைவாக ஜூலை 21 காணாமற்போனோர் தொடர்பான விசாரணை அலுவலகத்தின் சட்டத்தரணிகள், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் மன்றிற்கு சமூகமளித்திருந்தனர். சட்டமா அதிபர் சார்பாக எவரும் வருகை தரவில்லை.

'குருக்கள்மடம் மனிதப் படுகுழியானது முறையாக தோண்டப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டையே தமது அலுவலகம் தொடர்ந்தும் பேணி வருவதாக'' காணாமற்போனோர் தொடர்பான விசாரணை அலுவலகம் நீதிமன்றத்தில் தெரிவித்தது. இந்த மனிதப் புதை குழி அமையப்பெற்றுள்ளதாக நியாயமாக நம்பப்படும் பிரதேசத்தைத் தோண்டுவதற்கான கட்டளையினை மன்று ஆக்குமிடத்து தாங்கள் அவதானிப்பாளர்களாகச் செயற்படத் தயாராக இருப்பதாகவும் அது தெரிவித்தது.

மேற்படி சமர்ப்பணத்தை கருத்திற்கொண்ட கௌரவ நீதிமன்றம் குருக்கள்மடம் மனிதப் புதைகுழியை தோண்டுவதற்கான மீள் திட்ட வரைபை கௌரவ மன்றிற்குச் சமர்ப்பிக்குமாறு கொழும்பு சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரிக்கு கட்டளையாக்கியதோடு அடுத்த தவணைத் தினத்தில் அந்த திட்ட வரைபை மன்றில் முன்வைக்குமாறும் கட்டளையிட்டது.

ஆக மொத்தத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத்தில் இலங்கையும் இலங்கையின் பொருளாதாரமும் மீள் எழுச்சி பெறுகிறதோ இல்லையோ புதைக்கப்பட்டவர்களின் எலும்புகள் மீள்எழுச்சி கொள்ளும் என்பது மட்டும் நன்கு தெரிகிறது..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மேலும் 8 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தப்படும் 'பால்புட்டி'யை ஒத்த போத்தல் ஒன்றும் ஆடைகளை ஒத்த துணிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. சிந்துப்பாத்தி மயானத்தில் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01' மற்றும் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02' என நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்ட பணிகளுக்காக 45 நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இரண்டாம் பகுதி அகழ்வு பணிகள் நேற்று 17ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது

அதன்போது இரண்டு மனித புதைகுழிகளில் இருந்தும் 8 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 4 வரையானவை சிசு மற்றும் சிறுவர்களின் எலும்புஎச்சங்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய தினம் திங்கட்கிழமை அடையாளம் காணப்பட்ட 7 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மற்றும் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை அடையாளம் காணப்பட்ட 8 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் ஆகிய 15 எலும்பு கூட்டு தொகுதிகளும், அதனுடன் அடையாளம் காணப்பட்டுள்ள பால் போச்சியை ஒத்த போத்தல் , ஆடையை ஒத்த துணிகள் என்பவற்றை இன்று புதன்கிழமை அகழ்ந்து எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வு பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 26 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன்போது, 65 எலும்புகூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த இரு தினங்களில் 15 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## வாயைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

ஆனால் அதனை பெரிதாகச் செவிமடுக்காத தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்ஹ, எதிராளிகளாகவிருந்த சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ச, தயாசிறி ஜயசேகர, நீங்கள் எல்லோரும் கொழும்பு மாநகரசபை ஆட்சியை கைப்பற்ற ஒன்றிணைந்தீர்கள். ஊடகச் சந்திப்புகளை நடத்தினீர்கள். எதிர்கால நண்பர்களாகினீர்கள் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நாமல் ராஜபக்ச 'ஏன் நீங்களும் எமது நண்பர்தானே' என்றார்.

இதனால் கோபமடைந்த தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்ஹ, 'நீங்கள் நல்லவர்களா? தாஜூதீனைக் கொன்றவர்கள், படுகொலையாளிகளையும் வெள்ளை வான் கடத்தல்காரர்களையும் பாதுகாத்தவர்கள். உங்கள் தந்தை எத்தனை பேரை வேட்டையாடினர். சரத்பொன்சேகாவை என்னசெய்தீர்கள்? உங்களை எதிர்ப்பவர்களை இருக்க விட்டீர்களா? ஆகவே என்னிடம் வாய் கொடுத்து வாங்கிக்கட்டிக்கொள்ள வேண்டாம்' என்றார்.

## பெருந்தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ள கட்டளைச் சட்டத்தின் ஊடாக வேலையாட்களுக்கான குறைந்தபட்ச வேதனத்தை டிசெம்பர் முதல், 21,000 ரூபா முதல் 27,000 ரூபாவரையிலும், 2027 ஜனவரி மாதம் முதல் அதை 30,000 ரூபாவாகவும் அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இது நல்லதொரு விடயமென்பதால் இதற்கு எதிர்க்கட்சியின் ஆதரவைத் தருகிறோம்

ஆளும்தரப்பு, 'வளமான நாடு அழகான வாழ்க்கை' என்ற தனது கொள்கை அறிக்கையில் பிரிவு 41 இன் கீழ் மலையக தோட்டங்களில் பணிபுரியும் சமூகத்தினரது அன்றாட வேதனத்தை 1,700 ரூபா ஆக அதிகரிப்போம் என வாக்குறுதிகள் வழங்கியிருந்தபோதிலும், இன்று அந்த வாக்குறுதியை மறந்துவிட்டுச் செயல்படுகிறது. 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க ஊதிய கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 (1) இன் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பது குறித்து காணப்படுகின்றது. 1981 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க பெருந்தோட்டத் கொடுப்பனவுச் சட்டம் 4 ஆம் பிரிவின் கீழ் தோட்டச் சமூகத்திற்கு சம்பள நிர்ணய சபை எடுக்கும் முடிவின் அடிப்படையில் செலுத்த வேண்டிய தொகை தீர்மானிக்கப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டில் குறிப்பிட்டதொரு வேலையாட்களுக்கு குறைந்தபட்ச வேதனம் டிசம்பர் முதல், ரூ. 21,000 முதல் ரூ. 27,000 வரையிலும், ஜனவரி மாதம் முதல் ரூ.30,000 ஆக அதிகரிக்கப்படும் போது மலையகம் பெருந்தோட்ட தாழ்நில சிறு தோட்ட சமூகத்தை மறந்துவிட்டனர். தேயிலைத் தோட்டங்கள், ரப்பர் தோட்டங்கள், தென்னம் தோட்டங்கள் மற்றும் சிறு ஏற்றுமதி பயிர்களில் ஈடுபட்டுள்ளவர்களும் காணப்படுகின்றனர். முறையான கணக்கெடுப்புக்கு ஏற்ப, ஆளும்தரப்பு தனது வாக்குறுதிகளில் மிகக் குறைந்த அளவை மாத்திரமே நிறைவேற்றியுள்ளது.

அதனால் தோட்ட மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எப்போது நிறைவேற்றப்படும் என்பதை நாம் அறிய விரும்புகிறோம். நாடாளுமன்ற உறுப்பினர்மன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், இராதா கிருஷ்ணன் மற்றும் திகாம்பரம் ஆகியோர் பெருந்தோட்ட மக்களுக்கான அடிப்படை சம்பளம் 1700 ரூபா என்ற வாக்குறுதியை செயற்படுத்தும் திருத்தம் ஒன்றை முன்வைப்பதனால், இதற்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## முன்னாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதிகள் அனைவரும் ஒரே மட்டத்திலேயே நடத்தப்படுவர். தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து ஜனாதிபதிகளுக்கும் பொதுவாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு எனும் போது முன்னாள் ஜனாதிபதிகள் மாத்திரமின்றி நாட்டு பிரஜைகளும் கவனத்தில் கொள்ளப்படுவர். அனைவரது பாதுகாப்பையும் கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கைககள் முன்னெடுக்கப்படும்.

1986ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க ஜனாதிபதியின் உரித்துக்கள் (நீக்கல்) சட்டமூலத்தை நாடாளுமன்ற உறுப்பினர்மன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 'வளமான நாடு அழகான வாழ்க்கை' எனும் அரசாங்க கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டதற்கமைய, முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற விசேட சிறப்புரிமைகளை இரத்துச் செய்வதற்கு இயலுமாகும் வகையில் 1986ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க ஜனாதிபதியின் உரித்துக்கள் சட்டத்தை நீக்குவதற்காக சட்டமூலமொன்றை தயாரிப்பதற்காக கடந்த ஜூன் 16ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த பணிகளுக்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள ஜனாதிபதியின் உரித்துக்கள் (நீக்கல்) சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்மன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

## வெலிக்கடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேதன திருத்தச் சட்டமூலம் ஆகியவற்றின் மீதானவிவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த மாதம் .வெலிக்கடை சிறையில் எம்மவர்கள் படுகொலை செய்யப்பட்ட மாதம். தமிழினத்தின் விடுதலைக்காக ,உரிமைக்காக முதலில் ஆயுதம் எடுத்து போராடிய தலைவர் தங்கதுரை, குட்டிமணி போன்றோர் பருத்தித்துறை மணற்காட்டு கடற்கரையில் 1981 சித்திரை மாதம் 5 ஆம் திகதி இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டார்கள்.1983 ஜூலை மாதம் 25,27 ஆம் திகதிகளில் தமிழ் அரசியல் கைதிகள், பொதுமக்கள் என 53 பேர் கொடூரமாக சிங்கள காடையர்களினால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்தப்படுகொலைக்கு பொலிஸ் .சிறை அதிகாரிக்க எல்லோரும் உடந்தையாக இருந்தார்கள். குட்டிமணி உட்பட பலரின் கண்கள் பிடுங்கப்பட்டன.இரண்டு நாட்களாகி இந்த படுகொலைகள் இடம்பெற்ற சூழலில் தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி, ஜெகன்,நடேசதாசன், தேவன்,சிவபாதம் ,ஸ்ரீ குமார்,மரியாம்பிள்ளை,குமார்,குமாரகுலசிங்கம் மற்றும் டொக்டர் ராஜசுந்தரம் உட்பட 53 பேர் படுகொலை செய்யப்பட்டனர் .

எனவே 1983 ஆம் ஆண்டு இதே மாதம் வெலிக்கடை சிறையில் வைத்து படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பிலும் அரசு விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் அவர்கள் புதைக்கப்பட்ட புதைக்குழி எங்கேயுள்ளதெனவும் அரசு கண்டுபிடிக்க வேண்டும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை அரசு விசாரிப்பதுபோன்று இந்த வெலிக்கடை படுகொலைகளையும் விசாரணை செய்ய வேண்டும் என்றார்.

## ஒரு கையால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிவாரணப்படி திருத்த சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதன திருத்த சட்டமூலம் ஆகியவற்றின் மீதானவிவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியில் இருப்பவர்கள் 15 வருடங்களுக்கு முன்னர் கூறியவற்றை இப்போதும் தெரிவித்து வருகின்றனர். ஆட்சிக்கு வந்த பின்னரும் அதே பொய்களை கூறுகின்றனர். ஆட்சிக்கு வரும்போது எங்களை தயாராக இருக்குமாறு கூறினீர்கள். நீங்களும் தயாராக இருங்கள். போகும் இடத்தை காட்டுகிறோம். சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் கூறுகின்றீர்கள். அது நல்ல விடயம். ஆனால் சம்பளத்தை அதிகரித்து அந்த சம்பளத்திற்கு நிகராக வரியை அறவிட்டு மீண்டும் அரசாங்கத்திற்கு பெற்றுக்கொள்கின்றீர்கள். இதனால் சம்பளம் அதிகரிக்கப்பட்டமையின் நன்மை ஊழியருக்கு கிடைக்கின்றதா? அவ்வாறு இல்லை. வரிக் கொள்கைக்கு அமைய அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் பெருமளவு தொகையை ஆளும்தரப்பு பெற்றுக்கொள்கின்றது.

ஆட்சிக்குவர முன்னர் ஒரே கையெழுத்தில் செய்துவிடுவோம் என்று கூறினர். ஆனால் அது இலகுவான விடயம் அல்ல என்பது இப்போது புரிந்திருக்கும். இப்போது சகல அரச நிறுவனங்களிலும் பழிவாங்கல்கள் இடம்பெறுகின்றன. தொழிற்சங்கங்கள் ஒடுக்கப்படுகின்றன. தொழிற்சங்கங்களை நீங்களே வழிநடத்தினீர்கள். ஆசியர் சங்கத்தினர் பாடசாலைக்கு செல்லாமல் அதில் இருந்தனர். இப்போது தொழிற்சங்கங்களை கைவிட்டு, இடமாற்றங்களை செய்து அரச சேவையை செயலிழக்கச் செய்ய வேண்டும் என்று கூறுகின்றீர்கள். தமது அரசியல் தலையீடுகள் தொடர்பில் கதைக்காது அரச அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

ஆனால் அரச துறையை இல்லாமல் செய்துவிட வேண்டாம். சிறியவர்களின் ஆளும்தரப்பு இப்போது முதலாளிகளின் அரசாங்கமாக மாறியுள்ளது. அவர்களிடம் கேட்டுதான் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றது. கோடீஸ்வர வர்த்தகர்களிடம் கேட்டுதான் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. இதனை விடுத்து சாதாரண மக்களிடம் கேட்பதில்லை என்றார்.

## தேசபந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்னகோன் மீதான குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி என்று விசாரணைக் குழு ஒருமனதாக முடிவு செய்து, அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்கப் பரிந்துரைத்துள்ளது. இதேவேளை, குறித்த அறிக்கையை அச்சிட்டு நாடாளுமன்ற இணையத்தளத்தில் வெளியிடவும் மும்மொழிகளில் உறுப்பினர்களுக்கு வழங்கவும் கோரிக்கை விடுக்கிறேன்.

பொலிஸ் மா அதிபராகவிருந்த தேசபந்து தென்னகோனின் தவறான நடத்தை மற்றும் கடுமையான அதிகார துஷ்பிரயோகம் குறித்து விசாரித்து அறிக்கை தயாரிக்க கடந்த ஏப்ரல் மாதம் விசேட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. உயர் நீதிமன்ற நீதிபதி பிரீதி பத்மன் சூரசேன குழுவின் தலைவராக பணியாற்றினார்.

நீதிபதி நீல் இத்தவெல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் லலித் ஏகநாயக்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாகப் பணியாற்றினர். இந்த விசாரணைக் குழு 10 தடவைகளுக்கு மேல் கூடி, சாட்சியங்களைச் சேகரித்தது.

மேலும், 2025 ஜூலை 16 முதல் தினமும் கூடி, சாட்சியங்களைப் பதிவு செய்யும் பணியை மேற்கொண்டது. இதன்படி, விசாரணைக் குழுவின் சாட்சியப் பதிவு பணிகள் சமீபத்தில் நிறைவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனியார்துறையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் அறிவித்தார்.

இந்த புதிய திருத்தச் சட்டதிற்கமைய ஊழியர்களின் ஆகக் குறைந்த சம்பளம் கடந்த ஏப்ரல் மாதம் முதல் 27000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், 2026 ஜனவரி முதலாம் திகதி முதல் 30000 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

## மஹர சிறைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டுள்ளது என நீதி,சிறைச்சாலைகள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்காரின் கேள்விக்குப் பதிலளித்த நீதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பண்டைய காலம் முதல் மஹர சிறைச்சாலை வளவில் காணப்பட்ட பள்ளிவாசல் 2019 ஆம் ஆண்டின் பின்னர் இயங்கும் நிலையில் இல்லை என்பதனை அமைச்சர் அறிவாரா? அந்தப் பள்ளிவாசலைமீண்டும்பேணிவரஅங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப்படுமா என்று மரிக்கார் கேள்வி எழுப்பியிருந்தார். அமைச்சர் தனது பதிலில் மேலும் தெரிவித்ததாவது:

மஹர சிறைச்சாலைவளவில்காணப்பட்ட பள்ளிவாசலுக்கான பாதை சிறைச்சாலை பிரதான வாயிலே பயன்படுத்தப்படுகிறது. இதனால் பள்ளிவாசலுக்கு செல்வது போல் சிலர் சிறையில் இருப்பவர்களுக்கு செல்போன்கள், போதைப்பொருட்கள் போன்ற சட்டவிராத பொருட்களை வீசியுள்ளனர். அதேநேரம் இஸ்லாமிய ஒருவர் இறக்கும் போதும் விவாக நிகழ்வுகளின்போதும் பலர் இந்த பள்ளிவாசலுக்கு வந்தனர். இதனால் சிறைரச்ச்சாலையினதும் அங்குள்ள அதிகாரிகள், கைதிகளினதும் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது. அதனால் தான் அப்போதைய சிறைச்சாலை அத்தியட்சரினால் பள்ளிவாசலுக்கான உரிமையை வழங்க முடியாது என தெரிவித்து பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு 2013 மார்ச் மாதம் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதேபோன்று பள்ளிவாசலுக்குரிய இடத்தை சிறைச்சாலைக்கு கையளிக்குமாறு தெரிவித்தும் பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அதற்கு நிர்வாகம் எந்த பதிலையும் வழங்கவில்லை. மேலும் வெளிநபர்கள் இந்த பள்ளிவாசலுக்கு வருவதை தடை செய்யுமாறு தெரிவித்தும் சிறைச்சாலை அத்தியட்சகரால் 2019லும் கடிதம் அனுப்பட்டிருக்கிறது.

இந்த பள்ளிவாசலை மீண்டும் திறந்தாள் அதே பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மீண்டும் ஏற்படும். எனவே பள்ளிவாசலை மீண்டும் திறக்க அனுமதிக்க முடியாது. அதேவேளை சிறைச்சாலைக்கு சொந்தமான 5 பேர்ச்சஸ் காணி அங்குள்ளது. தேவையானால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாதவாறு அந்தக்காணியை வழங்க நடவடிக்கை எடுப்போம். ஆனால் மஹர சிறைச்சாலை வளவினுள் காணப்படும் பள்ளிவாசலை மீண்டும் திறக்க அனுமதிக்கப்படாது. அதேநேரம் 5பேச்சஸ் காணிக்கு மேலதிகமாக அந்த இடத்தில் வழங்க முடியுமா என்பது தொடர்பில் உறுதியாக தெரிவிக்க முடியாது. என்றாலும்காணிதேவைப்படும்பட்சத்தில்அந்த காணியைபள்ளவாசலுக்காகபெற்றுக்கொடுக்க தேவையான ஒத்துழைப்புகளை வழங்க தயாராக இருக்கிறோம் என்றார்.

## பெருந் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர்களுக்கு1700ரூபாவழங்கப்படும் என தெரிவித்தார். ஆனால் அவ்வாறு எதுவும் அதிகரிக்கப்படவில்லை. ஒருசில கம்பனிகள் வழங்குவதாக தெரிவித்தாலும் அது வழங்கப்படவில்லை. நாட் சம்பளமே அவர்களுக்கு வழங்கப்படுவதால், திட்டமிட்டு அந்த மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். அதனால் இதுதொடர்பில் ஆளும்தரப்பு கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் சம்பள சபை தொடர்பில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எமது தமிழ் முற்போக்கு கூட்டணி அந்த சபையை பிரதிநிதித்தும் செய்வதில்லை. ஆளும்தரப்பு அதில்இருக்கிது. அதேபோன்றுசி.டபிள்யூ.சீயும் அதில் இருக்கிறது. அதனால் இதன் மூலம் தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்க நடவடிக்கை எடுத்தால் அதற்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை. தோட்த்தில் முறை மாற்றம் ஒன்றை மேற்கொண்டு, தா ட்டத் தொழிலாளர்களையும் பங்காளிகளாக்க வேண்டும். அந்த மக்களின் வருமான்ததை அதிகரித்துக்கொள்ள திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டும். அதுதொடர்பில் கலந்துரையாட நாங்கள் தயாராக இருக்கிறோம். சம்பளம் அதிகரித்து மக்களின் வாழ்க்கையை முன்னேற்ற முடியாது.

மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு 2200 ரூபா வழங்க வேண்டும் என்றே சம்பள நிர்ணய சபையில் தெரிவித்திருந்தது. அது கிடைக்கிறதா, இருந்த அரசாங்கங்களுக்கும் அதனையே தெரிவித்து வந்தீர்கள். அதனால் நாங்கள் தெரிவிப்பது, தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு அல்ல. அவர்களை பங்காளிகளாக்க வேண்டும். அதுவே எமது நிலைப்பாடு. அதனால் முறைமாற்றம்ஒன்றைமேற்கொள்தன்மூலமே தோட்டத்துறையை முன்னேற்ற முடியும். அவ்வாறு இல்லாமல் முதலாளிமாருடன் கலந்துரையாடிஒருபோதும்தோடத்துறையை அபிவிருத்தி செய்ய முடியாது. அவர்கள் நல்லவிடயங்களுக்கு ஒருபோதும் இணங்குவதில்லை என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கறுப்பு ஜுலை நினைவுகள் சகோதரத்துவத்தின் பெயரால் மறைக்கப்படுதல் நியாயமா?

1983ஆம் ஆண்டின் ஜுலை மாதம், இலங்கையின் அரசியல் மற்றும் சமூக வரலாற்றில் ஒருபோதும் மறக்க முடியாத ஒரு கருப்பு புள்ளியாகவே மாறிவிட்டது. தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரங்கள்,'கறுப்பு ஜுலை' என வர்ணிக்கப்படும் அந்த நாட்களில் இடம்பெற்ற சம்பவங்கள், தமிழர் சமூகத்தின் எண்ணற்ற உயிர்களையும், சொத்துகளையும், மன அழுத்தங்களையும், பிழைப்பிற்கான முழுமையான உரிமையையும் அழித்தன.

இந்த கலவரங்கள், யதார்த்தமாக, ஒரு இனத்தின்மேல் திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல்களாக இருந்தன. அவை தாறுமாறான, தன்னிச்சையான சம்பவங்கள் அல்ல; மாறாக, சில அரசியல் மற்றும் அதிகார தளங்களில் இருந்து பரிந்துரைக்கப்பட்ட அல்லது சுழற்றப்பட்ட நிகழ்வுகளாகவே பதிவு செய்யப்படுகின்றன. ராணுவத்தின் பின்தங்கிய தலையங்காடும் நடவடிக்கைகள், காவல்துறையின் பாகுபாடான தலையீடுகள், பொதுத் தலைவர் பேசாமையின் பின்னால் மறைந்திருந்த அர்த்தங்கள் – இவை அனைத்தும் அதன் காலத்தின் இருண்ட உண்மைகளை வெளிக்கொணர்கின்றன.

இந்நிலையில், ஆண்டுதோறும் ஜுலை மாதம் நடைபெறும் சில நிகழ்வுகள், 'சகோதரத்துவ தினங்கள்' என்ற பெயரில், நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், இவ்வாறு மேற்கொள்ளப்படும் நினைவுநாள்கள், உண்மையில் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு நியாயமும், அக்கறையும் வழங்குவதைவிட, அவர்களது மீள நினைவுகளை மழுங்கடிக்கும், உண்மைகளை மறைக்கும், கூடவே அவர்களை மேலும் காயப்படுத்தும் முயற்சியாகவே அமைகின்றன.

ஒரு சமூகத்தின் இழப்புகளை 'ஒற்றுமையின் பெயரில்' அழித்துவிடமுடியாது. அது நேர்ந்ததை ஒப்புக்கொள்வது, அதற்காக பொறுப்பு ஏற்கும் அரசியல் நெறிமுறைகளை உருவாக்குவது, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடுகளும், உணர்வுப் பராமரிப்பும் வழங்குவது என்பவற்றின் மூலமே அது சாத்தியம். இவை இல்லாமல் எந்தவொரு 'சகோதரத்துவ நிகழ்வும்' உண்மையான நீதி நிலைபெறுவதற்கான வழியாக இருக்க முடியாது.

தீவிரவாதத்துக்கெதிரான போராட்டம் என்ற பெயரில், 1983 கலவரங்களை மன்னிக்கவேண்டும், மறக்கவேண்டும் என்று சில சக்திகள் வலியுறுத்தும் முயற்சிகளும் கவலைக்கிடமானவை. மறப்பது தீர்வல்ல. உண்மைகளைத் தெளிவுபடுத்தியும், மன்னிப்பை மதிப்புள்ளவையாக ஆக்குவதும், நீதியை நிலைநாட்டுவதும் அதற்குரிய நேர்மையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும்தான் வரலாற்று நீதி.

இன்று, பல இளம் தலைமுறைகள் கறுப்பு ஜுலை பற்றி தெரிந்து கொள்ளாமலே வளருகின்றன. அதற்குக் காரணம் கல்வித்துறையின் மௌனம் மட்டுமல்ல; மாறாக, நாடளாவிய நினைவுகள் எப்படி கட்டுப்படுத்தப்படுகின்றன என்பதிலுள்ள சிக்கலும் ஆகும். தமிழ் அரசியல் சக்திகளினதும் ஊடகங்களினதும் செயலிழப்பும் இதற்குப் பொறுப்பாகும்.

ஒரு நாடு, அதன் இருண்ட கடந்தகாலங்களை நேருக்கு நேர் பார்த்து, வரலாற்றை அச்சமின்றி எதிர்கொள்ளும் துணிவுடன் மட்டுமே முன்னேற முடியும். வரலாற்றை ஒழுங்குபடுத்துவது, மறைப்பதன் மூலம் அல்ல; உண்மைகளை வெளிக்கொணர்ந்து அதிலிருந்து கற்றுக்கொள்வதன் மூலமே எந்தவொரு நீடித்த அமைதியும் சாத்தியமாகும்.

எனவே, கறுப்பு ஜுலை என்பது சகோதரத்துவம் குறித்து பேசும் தினம் அல்ல. அது ஒரு இனவெறிப் பேரழிவின் நினைவாகவே இருக்கவேண்டும். அந்த நிகழ்வுகளை மறந்து விடவேண்டும் என்று வற்புறுத்தும் ஒவ்வொரு சுயநல வாய்ந்த முயற்சியும், அக்காலத்தில் பாதிக்கப்பட்டவர்களின் மனங்களில் இன்னும் ஆழமான புண்களைக் கொடுக்கின்றன.

சமாதானம் என்பது ஒப்புதல், பொறுப்பு, உண்மையான நீதி மூலமே உருவாகும். அதற்கான முதற்படியாக, 1983 கலவரங்களைத் தவிர்க்க முடியாத வரலாற்று உண்மையாக, தேசம் முழுவதும் உரிய மரியாதையுடன் நினைவு கூர வேண்டும். மறைமுகமாகத் திட்டமிடப்படும் நிகழ்வுகள் அல்ல.

சகோதரத்துவத்தின் முகத்தில் பதிக்கப்பட்ட கறுப்பு வெள்ளை முகமூடிகளை அகற்றி, உண்மை முகத்தை நாடே எதிர்நோக்க வேண்டும். இல்லையெனில், ஒற்றுமை ஒரு உண்மை அல்ல; ஒரு பாசாங்கான வாதமாகவே மாறிவிடும்.

## மிஹின் லங்கா மோசடி வழக்கில் சஜின் வாஸ் மீண்டும் சந்தேகநபர்

மிஹின் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுஅதிகாரிசெயற்பட்டகாலப்பகுதியில் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து இயந்திரமொன்றை கொள்வனவு செய்து ஆளும்தரப்புக்கு 883 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியமை தொடர்பில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கிலிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவை விடுவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் இரத்துச் செய்தது.

மேலும்இந்தவழக்கைமீண்டும்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும்மேன்முறையீட்டுநீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதியளித்தது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பை வலுவற்றதாக்கி அந்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு வலியுறுத்தி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால்தாக்கல் செய்யப்பட்டுள்ள மீள் பரிசீலனை மனுவை கருத்திற்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சசி மகேந்திரன் மற்றும் அமல் ரண ராஜா ஆகிய குழாம் இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

2007 ஆம் ஆண்டு ஜூன் மாம் 27 ஆம் திகதி முதல் 2008 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மிஹின் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக செயற்பட்ட காலப்பகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்மன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன சட்ட விதிமுறைகளுக்கு அப்பாற் சென்று

தனியார் நிறுவனமொன்றில் இருந்து உபகரணமொன்றை கொள்வனவு செய்தமை ஊடாக அரசுக்கு 833 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக குற்றஞ்சாட்டி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது

அதனை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என பிரதி வாதி தரப்பு முன்வைத்த விடயங்களை கருத்திற்கொண்டு கொழும்பு மேல் நீதிமன்றம் சஜின் வாஸ் குணவர்தனைவை அந்த வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்து உத்தரவு பிறப்பித்தது.

இந்நிலையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சட்டத்துக்கு முரணானது என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் சார்பில் மன்றில் ஆஜரான அந்த திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அனுசாசம்பந்தபெருமமுன்வைத்தவிடயங்களை கருத்திற்கொண்ட நீதிபதிகள் குழாம் அந்த உத்தரவை இரத்து செய்து இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கியது.

## ரூ. 18 கோடி பெறுமதியான ஹசிஸுடன் கனேடியப் பெண் ஒருவர் நேற்றுக் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று அதிகாலை 18 கோடியே 10 இலட்சம் ரூபா பெறுமதிமிக்க ஹசிஸ் போதைப்பொருளுடன் கனேடிய பெண் ஒருவர் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவிலிருந்து கட்டார் தோஹா விமான நிலையத்தின் ஊடாக போதைப்பொருளுடன் நாட்டை வந்தடைந்திருந்த நிலையில் மேற்படி பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் வருகை முனையத்தில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை சுங்க போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் சந்தேகத்திற்குரிய வெளிநாட்டு பெண் பயணி ஒருவரை தடுத்து நிறுத்தி சோதனைக்குட்படுத்தியுள்ளனர். இதன்போது அப்பெண்ணின் பயணப்பொதிகளை திறந்து பார்த்து பரிசோதித்த அதிகாரிகள், பயணப்பொதியில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் போதைப்பொருளை கண்டெடுத்துள்ளனர்.

குறித்த பயணியிடம் இருந்து 18 கிலோ 123 கிராம் எடையுடைய ஹசிஸ் போதைப்பொருள் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் சந்தைப்பெறுமதி சுமார் 18 கோடியே 10 இலட்சம் ரூபா என சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 37 வயதுடைய கனேடிய பெண் பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் கனடாவின் மான்ட்ரியல் நகரிலிருந்து கட்டார் தோஹா விமான நிலையத்தினூடாக கட்டார் ஏர்வேஸ் விமான சேவைக்கு சொந்தமான கிவ்.ஆர் 658 என்ற விமானத்தின் மூலம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை 2.50 மணியளவில் நாட்டை வந்தடைந்துள்ளார். இதேவேளை கைதான சந்தேகநபர் மற்றும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொடர்பில் விமான நிலைய போதைப்பொருள் பணியகம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

## எரிபொருள் கொள்வனவில் கடந்த காலத்தில் மோசடியா?

### விசாரணை நடக்கிறது என்கிறார் அமைச்சர்

கடந்தகாலங்களில் எரிபொருள் கொள்வனவில் மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பில் விசாரணைகள் நடைபெறுவதாக வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, எரிபொருள் கொள்வனவில் கடந்த காலங்களில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும், கொள்வனவின்போது பெருமளவான நிதி அமைச்சராக இருந்த கஞ்சன விஜேசகரவின் பைகளுக்குபோயுள்ளதாகவும்முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

எரிபொருள் கொள்வனவில் மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா என்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணை முடிவில் அவ்வாறு மோசடி நடந்துள்ளதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். அதுவரையில் மோசடி நடந்துள்ளதா? இல்லையா? என்று கூற முடியாது.

அதாவது பிரிமியம் ஊடாக வேண்டுமென்றால் அது எவருடைய பைகளுக்குள் போனாலும், வரியாக பெறுவது அவர்களின் பைகளுக்கு போக முடியாது. அது அரசாங்கத்திற்கு கிடைப்பது. நாங்கள் அரசாங்கத்தை பெற்றுக்கொள்ளும் போது இருந்த வரியே இருக்கின்றது. அதில் வட் வரி உள்ளிட்ட வரிகள் உள்ளன. கடந்த அரசாங்க காலத்தில் திறைசேரி ஏற்றுக்கொண்டுள்ள 884 மில்லியன் ரூபா கடனும் இருக்கிறதது. அதன்படி கடனை செலுத்துவதற்கான 50 ரூபா வரியும் உள்ளது. அதனை செலுத்தி முடித்த பின்னர் குறிப்பிட்ட வரியை நீக்க முடியுமாக இருக்கும் என்றார்.

# மாகாணங்கள் சம்மதித்தால் மட்டுமே வைத்தியசாலைகள் மத்திய அரசின் கீழ்

## சுகாதார அமைச்சர் விளக்கம்

மாவட்ட வைத்தியசாலைகளைக் கொழும்பு அரசுக்குக் கீழ் கொண்டுவந்து அந்த வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் இயலுமை எங்களுக்கு இருக்கிறது. என்றாலும் மாகாண சபையின் அனுமதியுடனே அதனை செய்ய முடியும். மாகாண சபை அனுமதிக்காவிட்டால் எங்களுக்கு எதுவும் செய்ய முடியாது என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனர் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்காக எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் வைத்தியசாலைகளில் கொழும்பு அரசுக்குக் கீழ் இருக்கும் ஒரே வைத்தியசாலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையாகும். ஏனைய வைத்தியசாலைகள் மாகாண அரசின் கீழே இருக்கின்றன. அந்த வைத்தியசாலைகளை கொழும்பு அரசின் கீழ் கொண்டுவரும் எண்ணம் எமக்கு இல்லை.

என்றாலும் நாட்டில் இருக்கும் மாவட்ட வைத்தியசாலைகளில் மத்திய அரசுக்குக் கீழ் இல்லாத 7 மாவட்ட வைத்தியசாலைகள் இருக்கின்றன. அந்த மாவட்ட வைத்தியசாலைகள் மத்திய அரசுக்குக் கீழ் செயற்படுமாக இருந்தால், அந்த வைத்தியசாலைகளுக்கான உதவிகளை முறையாகவும் உயர்ந்த மட்டத்திலும் மேற்கொண்டு செல்ல முடியும் என்ற நிலைப்பாட்டிலே நாங்கள் இருக்கிறோம். அந்த நடவடிக்கைகளை மாகாண சபையின் இணக்கப்பாட்டுடனேயே செய்ய முடியும். மாகாணசபை விருப்பம் இல்லை என்றால், அதனை எங்களால் செய்ய முடியாது.

அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் போதனா வைத்தியசாலைக்குத் தேவையாக இருக்கும் எம்.ஆர்.ஐ. மற்றும் சீடி ஸ்கேனர் மற்றும் கெட்லப் ஆகிய உபகரணங்கள் நிச்சயமாக வழங்கப்பட வேண்டியதாகும். அதனால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குத் தேவையான விசேட வைத்திய நிபுணர்கள் அடங்கிய பணிக்குழாம் மற்றும் தேவையான வைத்திய உபகரண வசதிகளையும் வழங்கி அந்த வைத்தியசாலையின் வசதிகளை அதிகரித்துக் கொடுக்க விரைவாக நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# பிணை கிடைத்தது

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்துக்கு செலுத்த வேண்டிய வரி நிலுவையான 11 இலட்சம் ரூபாவை நீக்குவதற்காக வர்த்தகரொருவரிடம் 50 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற முற்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியில் வைக்கப்பட்டிருந்த உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் பிரதி ஆணையாளரை பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதிவான் மன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

கொழும்பு ஜாவத்தை வீதியில் அமைந்துள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கிளை அலுவலகத்தின் பிரதி ஆணையாளர் ஒருவரே இவ்வாறு விளக்கமறியில் வைக்கப்பட்டிருந்ததுடன் அவரை 10 இலட்சம் ரூபா இரு சரீரப்பிணை களில் செல்ல கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குணுவல அனுமதியளித்தார். மேலும் அவரை விசாரணை அதிகாரிகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது பிரதிவாதி தரப்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணி மன்றில் விடயங்களை முன்வைத்து தனது சேவைபெருநரை விளக்கமறியலில் வைத்தமையால் அவரது 14 வயது மகன் கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாக குறிப்பிட்டார்.

குறித்த சிறுவன் பாடசாலைக்கு செல்வதில்லை எனவும் உணவு உண்பதை தவிர்த்து வருவதாகவும் குறிப்பிட்ட சட்டத்தரணி அவர் தற்போது சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதனை முக்கியமாக விடயமாக கருத்திற்கொண்டு தனது சேவை பெருநரை பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்ட கொழும்பு மேலதிக நீதவான் பிரதிவாதியை பிணையில் விடுவிக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.மேலும் இந்த வழக்கு எதிர்வரும் டிசம்பர் 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கொழும்பு தெமட்டகொட கொலன்னாவை பிரதேசத்தில் இயங்கி வரும் நிறுவனமொன்றின் 2025 ஆம் ஆண்டுக்கான உள்நாட்டு இறைவரித்திணைக்களத்துக்கு செலுத்த வேண்டிய வரி நிலுவை 11 இலட்சம் ரூபாவை நீக்குவதற்காக அந்த நிறுவனத்தின் உரிமையாளரிடம் சந்தேகநபர் ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் கோரியுள்ளார்.

பின்னர் அந்த இலஞ்சத்தை 50 ஆயிரம் ரூபா இலஞ்சமாக குறைத்ததாக தெரிவித்து குறித்த வர்த்தகர் இந்த முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

சந்தேகநபர் குறித்த பணத்தை தனது அலுவலகத்தில் வைத்து பெறுவதற்கு முற்பட்ட போது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




# வைத்தியசாலைகளை மத்திய அரசு கையகப்படுத்துவது மாகாண சபைகளைப் எதிர்காலத்தில் பலவீனப்படுத்தும்

## சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

மாவட்டங்களிலுள்ள எல்லா வைத்தியசாலைகளும் மத்திய அரசுக்குள் செல்ல வேண்டும் என்று கூறுவதன் ஊடாக மாகாணசபையையும் ஒரு பலவீனமான கட்டமைப்பாக எதிர்காலத்தில் மாறக்கூடிய அபாய நிலையுள்ளதாக தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கேள்வி எழுப்பும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நாங்கள் வாழைச்சேனை . மட்டக்களப்பு நகர், களுவாஞ்சிக்குடிக்கு என 3 ஒசுசல மருந்தகங்களை கேட்டிருந்தோம். இந்த 3 இடங்களிலுமுள்ள வைத்தியசாலைகளும் பெரும் மக்கள் தொகைக்கு சிகிச்சை வழங்கும் வைத்தியசாலைகள். இதனடிப்படையில்தான் 2018, 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒசுசல நிறுவனத்தினர் நேரடியாக களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு வருகை தந்தபோது நிரந்தரக் கட்டடம் இருந்தால் ஒசுசல அமைக்கலாம் எனக் கூறினார்கள். இதற்கமைய கட்டடம் அமைக்கப்பட்டபோதும் அது தற்போது மூடப்பட்டநிலையில் உள்ளது.

எனவே மட்டக்களப்பு நகரில் முதலாவதாக ஒசுசல அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் நிலையில், களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையிலும் அது அமைக்கப்படவேண்டும்.

எமது மாவட்டத்தை பொறுத்தவரை 3, 4 வகை வைத்தியசாலைகள் உள்ளன. எனினும் இந்த வைத்தியசாலைகளுக்கு போதிய வளங்கள் கிடைக்காத காரணத்தினால் எல்லா வைத்தியசாலைகளும் மத்திய அரசுக்குள் செல்லவேண்டும் என்று கூறுவதன் ஊடாக மாகாண சபையையும் ஒரு பலவீனமான கட்டமைப்பாக எதிர்காலத்தில் மாறக்கூடிய அபாய நிலையுள்ளது.

மத்திய அரசின் கீழ் இருக்கும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஊடாக கட்லாப், எம்.ஆர்.ஐ., சி.ரி.ஸ்கேனர் ஆகியவற்றிற்கான அனுமதி கிடைத்திருந்தது. ஏற்கனவே மட்டகளப்பு மாவட்டத்திற்கு இறக்குமதிசெய்யப்பட்டகட்லாப்பைகளுத்துறைமாவட்டத்திற்கு அப்போதைய சுகாதார அமைச்சர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி மாற்றினார். இது 2021இல் நடந்தது. தற்போது வழங்கவுள்ளதாக்கக் கூறப்படும் கட்லாப், எம்.ஆர்.ஐ, சி.ரி.ஸ்கேனர் ஆகியவற்றில் ஐ.,சி.ரி.ஸ்கானர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அவசியமில்லை எனக்கூறி வெட்டப்பட்டதாக நாங்கள் அறிகின்றோம். நீங்கள் உங்களின் அண்மையை மட்டக்களப்பு பயணத்தின்போது எம்.ஆர்.ஐ.யை வழங்கும் உறுதிமொழியை வழங்கியிருந்தீர்கள். எனவே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியம் ஊடாக மட்டக்களப்புக்கென ஒதுக்கப்பட்ட கட்லாப், எம்.ஆர்.ஐ, சி.ரி.ஸ்கானர் ஆகியவற்றை மட்டக்களப்புக்கு வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தை சுகாதார அமைச்சர் தரவேண்டும் என்றார்.

# எரிபொருளின் வரியைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் எப்போது?

## தயாசிறி எம்.பி. சபையில் கேள்வி

எரிபொருளுக்கு அறவிடப்படும் வரிகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக ஆட்சிக்கு வர முன்னர் ஆளும்தரப்பு கூறினாலும், அதனைச் செய்யாது தொடர்ந்தும் எரிபொருள்லீற்றரொன்றுக்குபெருமளவில்வரியைஅறவிடுகின்றது. இந்த வரி நிவாரணம் மக்களுக்கு எப்போது வழங்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, வலுச் சக்தி அமைச்சரிடம் இந்தக் கேள்வியை எழுப்பினார். இதன்போது தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்ததாவது:

எரிபொருள் கொள்வனவின்போது ஒவ்வொரு லீற்றருக்கும் பெருமளவான தொகை முன்னாள் அமைச்சர் கஞ்சன விஜேசேகரவின் பைகளுக்குள் போவதாக குற்றச்சாட்டுகள் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ன. அது இப்போதும் நடக்கின்றதா? என்று கேட்கின்றேன்.

அத்துடன், ஒவ்வொரு மாதமும் விலை சூத்திரம் முன்வைக்கப்பட்டது. ஒவ்வொரு ஏப்ரல் மாதத்திலும் இவ்வாறு நடந்தது. ஆனால் இப்போது நிறுத்தப்பட்டுள்ளது. ஜீன் மாதத்தில் எரிபொருள் இறக்கப்பட்டமை தொடர்பான தகவல்கள் உள்ளன. அதாவது ஒக்டேன் 92 பெட்ரோல் லீற்றரொன்று 161.18 ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 120.42 ரூபா மக்களிடம் வரியாக அறவிடப்படுகிறது. இதுவே கஞ்சன விஜேசேகரவின் பைகளுக்குள் போவதாக கூறப்பட்டது. அத்துடன் ஒக்டேன் 95 பெட்ரொல் 154.39 ரூபாவுக்கு கொண்டு வரப்படுவதுடன், 145.29 ரூபா வரி அறவிடப்படுகிறது. ஒட்டோ டீசல் 185.67 ரூபாவுக்கு கொண்டுவரப்படுவதுடன், 97.47 ரூபா வரி அறவிடப்படுகிறது. அதேபோன்று சூப்பர் டீசல் 157.84 ரூபாவுக்கு கொண்டு வரப்படுவதுடன், 120.67 ரூபா வரி அறவிடப்படுகிறது.

இந்தவரிகளைகுறைத்துமக்களுக்குநிவாரணம்வழங்குவதாக கூறப்பட்டது. அது எப்போது செய்யப்படும் என்று கேட்கின்றோம். இதில் இன்னும் மோசடி நடக்கின்றதா என்று கேட்கின்றேன் .

அத்துடன் உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ளது. அத்துடன் டொலர் பெறுமதியும் குறைந்திருந்தது. இவ்வாறு உலக சந்தையில் எரிபொருள் விலை உயராமல் இருக்கும் நிலையில், 3 மாதங்களுக்கு தேவையான எரிபொருள் கையிருப்பில் இருக்குமாக இருந்தால் ஏன் ஜூலை மாதத்தில் எரிபொருள் விலையை அதிகரித்தீர்கள். ஏன் மக்களின் வயிற்றில் அடித்தீர்கள். அதனால் சகல பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ள. இது நிவாரணம் வழங்க வேண்டிய நேரம்தானே என்றார்.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

# ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவன முன்னாள் தலைவருக்கு பிணை

மூன்று ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலஞ்சஊழல்விசாரணைஆணைக்குழுவினரால்கைது செய்யப்படடு விளக்கமறியில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்கன்ஏர்லைன்ஸ்முன்னாள்தலைவர்அந்தோணி நிஷாந்த விக்ரமசிங்கவை பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

சந்தேக நபரான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் முன்னாள் தலைவர் அந்தோணி நிஷாந்த விக்ரமசிங்க நேற்று சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோதே கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

இதற்கமைய சந்தேகநபரை 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் 5 மில்லியன் ரூபா மூன்று சரீரப்பிணையிலும் விடுவிக்க நீதவான் உத்தரவு பிறப்பித்தார் மேலும் அவருக்கு வெளிநாட்டு பயணத்தடையும் விதிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் முன்னாள் தலைவர் அந்தோணி நிஷாந்த விக்ரமசிங்க கடந்த ஜூன் 27 ஆம் திகதி அன்று நாவல பகுதியில் வைத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார். சந்தேக நபருக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மலேசியாவின் கோலாலம்பூரிலிருந்து கடந்த 22.01.2014 அன்று கட்டுநாயக்காவுக்குப் புறப்பட திட்டமிடப்பட்டிருந்த யூ.எல். 319 எனும் விமானத்தின் பயணப் பாதையை மாற்றியதன் மூலம் அரசுக்கு 4இ512 அமெரிக்க டொலர் நட்டம் ஏற்படுத்தியதாக முதல் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது குற்ரச்சாட்டுஇ கடந்த 26.01.2014 அன்று மாலைத்தீவிலிருந்து இலங்கை ஊடாக பிரான்சுக்குப் புறப்படத்திட்டமிடப்பட்டிருந்த 75 பயணிகளை யூ.எல். 563 எனும் விமானத்தின் மூலம் அனுப்பியதன் ஊடாக அரசுக்கு 19இ160 அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்படுத்தியமை தொடர்பிலானதாகும்.

மூன்றாவது குற்றச்சாட்டு 19.12.2014 அன்று கட்டுநாயக்காவில் உள்ள 18வது மைல் கல் பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக 1250000 ரூபா அரச பணத்தை செலவிட்டது தொடர்பிலானதாகும்.

இதற்கமைய சந்தேக நபர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் இவ்வாறு மன்றில் ஆஜர் செய்யப்பட்டார். இந்த நிலையிலேயே அனைத்து விடய்ங்கலையும் ஆரயந்த நீதிவான் சந்தேக நபருரை பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

## இலங்கை – சவூதி இடையே கடன் ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கை அரசுக்கும் சவுதி மேம்பாட்டு நிதியத்திற்கும் இடையிலான இருதரப்பு திருத்தப்பட்ட கடன் ஒப்பந்தங்கள் திங்கட்கிழமை கையெழுத்திடப்பட்டன. மொத்த மறுசீரமைக்கப்பட்ட கடன் மதிப்பு சவுதி ரியால் 516 கோடி 9 லட்சத்து 51 ஆயிரத்து 65 ஆகும் என்று நிதி, திட்டமிடல் மற்றும்பொருளாதார மேம்பாட்டு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போதைய வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின்கீழ்சவுதிமேம்பாட்டுநிதியத்துடன்இருதரப்பு திருத்தப்பட்ட கடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவது இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும்.

சவாலான பொருளாதார சூழ்நிலை காரணமாக வெளிநாட்டுக் கடன் திருப்பிச் செலுத்துதல்களை நிறுத்தி வைப்பதாக இலங்கை அறிவித்த பிறகும், சவுதி அரேபியா இராச்சியம்நாட்டிற்குகடன்களைவழங்குவதில்குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. இது எந்த தடையும் இல்லாமல் வளர்ச்சித் திட்டங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், சவுதி மேம்பாட்டு நிதியத்தால் வழங்கப்படும் கடன்கள் சலுகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன,இது நாட்டின் ஒட்டுமொத்த கடன் சுமையைக் குறைக்க உதவியுள்ளது.

இந்த ஒப்பந்தங்களில் இலங்கை அரசின்ன் சார்பாக நிதி, திட்டமிடல்மற்றும்பொருளாதார அபிவிருத்தி அமைச்சகத்தின் செயலாளர் கலாநிதி ஹர்ஷனா சூரியப்பெருமவும், சவுதி அரேபிய தரப்பின் சார்பாக சவுதி அபிவிருத்தி நிதியத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுல்தான் அப்துல் ரஹ்மான் அல்மர்ஷாத்தும் கையெழுத்திட்டனர். இணையாக, இந்த விஜயத்தின் போது, சவுதி மேம்பாட்டு நிதியத்தின் கடன் நிதியுதவியுடன் கட்டப்பட்ட ‘வடமேற்கு பல்கலைக்கழக நகர அபிவிருத்தி திட்டத்தின்‘ திறப்பு விழாவில் சவுதி மேம்பாட்டு நிதியத்தின் உயர்மட்டக் குழுவும் பங்கேற்றது.

கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் நிறைவடைவது சந்தேகத்திற்கு இடமின்றி சவுதி அரேபியா இராச்சியத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான ஆழமான மற்றும் நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு வழி வகுக்கும்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.07.2025இல் வெளியிடப்பெற்றது